MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# சங்ககாலத் தமிழ்– ஒரு பார்வை

**முனைவர் இரா.வனிதாமணி**

உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை

குயீன்ஸ் கலை அறிவியல் மகளிர் கல்லூரி

புனல்குளம் புதுக்கோட்டை. அலைபேசி.9597007538

மின்னஞ்சல்: vanithamanichandrabose@gmail.com

# SANGAM TAMIL – A VIEW

**Dr R. VANITHAMANI**,

ASSISTANT PROFESSOR IN TAMIL,

QUEENS COLLEGE OF ARTS SCIENCES FOR WOMEN

PUNALKULAM PUDUKKOTTAI.CELL.9597007538,

Mail id . vanithamanichandrabose@gmai.com

**MARCH - APRIL**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

**Abstract**

The Eight poems, songs, that are especially of Sangam Literatureare the eight volume set and the ten volume set. The elements found in Tholkappiyam Tamil are found in Sangam period Tamil. Except for some changes, Sangam period tamil is entirely Tholkappiyam Tamil. Therefore, this study aims to examine Sangam period tamil and the changes that Sangam period Tamil has undergone.

**Keywords**

Sangam Literature, Nasality, Character, Predominance, Cagence.

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க இலக்கியம் என்று சிறப்பாகக் குறிக்கப் பெறுவன எட்டுத்தொகையும்,பத்துப்பாட்டும் ஆகும்.தொல்காப்பியத் தமிழில் காணப்பட்ட கூறுகள் சங்ககாலத் தமிழில் காணப்படுகின்றன.சில மாற்றங்களைத் தவிர சங்ககாலத் தமிழ் முழுக்க முழுக்க தொல்காப்பிய தமிழாகும்.ஆதலால் சங்ககாலத் தமிழை பற்றியும், சங்ககாலத் தமிழ் பெற்றுள்ள மாற்றங்களையும் பற்றி ஆராய்வதே, இவ்வாய்வாகும்.

**திறவுச்சொற்கள்**

சங்க இலக்கியம், மூக்கொலி, தன்மை, முன்னிலை, படர்க்கை, உறழ்ச்சி ஆகியவை ஆகும்.

**முன்னுரை**

சங்க இலக்கியத்தில் பன்னிரண்டு உயிர் எழுத்துகளும்,மொழிக்கு முதலில் வந்துள்ளன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

மெய்யெழுத்துகளுள் க,தப,ம,என்னும் ஐந்து மெய்யெழுத்துகளும்,எல்லா உயிர் எழுத்துகளோடு இணைந்து மொழிக்கு முதலில் வருகின்றன.சங்க இலக்கியத்தில் ஒன்பது உயிர்களுடன் மட்டுமின்றி அகரத்தோடும் ஐகாரத்தோடும் இணைந்து மொழி முதலாகிறது.வகரம் உ ஊ,ஒ,ஓ, என்னும் உயிர்கள் ஒழிந்த ஏனைய எட்டு உயிர்களோடு இணைந்து மொழி முதலில் வரும் என்று தொல்காப்பியம் கூறுவது போன்று ,சங்க இலக்கியத்திலும் வருகின்றன.

**வடுகர்** [1] **நற்-212**

**வாடை**[2] **நற்-05**

**விரல்**[3] **அக-34**

**வீரர்**[4] **அக-36**

**வெகுகரம்ளி** [5] **பொருந-172**

**வேந்தன்**[6] **அக-24**

**வையை மது**[7] **-356**

- என்பவனவாகும்.

சங்க இலக்கியத்தில் ஞகரம் அ எ ஒ வோடு இயைந்துமொழி முதலில் வருவதுடன் அ,இ யோடு இணைந்தும் அமாழி முதலாகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

**ஞரல**[8] **பதிற்-30**

**ஞிமிறு**[9] **புறம்-93**

யகரம் ஆவோடு மட்டுமல்லாது அகரத்தோடும் ஊகாரத் தோடும் இணைந்து மொழி முதலில் வந்துள்ளது.

**யவனர்**[10] **அக-149**

**யூபம்** [11] **பதிற்-67**

பிற உயிர்களுடன் இணைந்து மொழி முதல் வருவது வடமொழி தொடர்பால் ஏற்பட்டிருக்கலாம்[12] ·மயக்கங்களும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.உடம்படு மெய்யான யகர வகரங்களின் வருகை சங்க காலத்தில் மிகுதியாம்.இதனால் உயிர் மயக்கங்கள் தவிர்க்கப்பட்டன.

**செய்யு ளிறுதிப் போலி மொழிவயின்**

**னகார மகாரம் ஈரொற் றாகும்**[13] **தொல்.எ.51**

போலும் என்ற சொல் போன்ம் ஆகிறது. சங்க இலக்கியங்களில் வேறு சில சொற்களையும் காணலாம்.

**சான்ம்- மலை**[14] **நற்-381**

**தின்ம்**[15] **புற-150**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

சங்க இலக்கியங்களில் வேறு சில மெய்களும் ண்ம் - ய்ம் என்பனவும் சொல் இறுதியில் ஈரொற்றாய் வந்துள்ளன.

**கொண்ம்**[16] **புற-152**

**தேய்ம்**[17] **நற்-68**

இது ண்ம் ஈரொற்றாய் அமைந்து வருதலை காண முடிகிறது.

**லளமெய் திரிந்த ணனமுன் மகாரம்**

**நைந்தீ ரொற்றாஞ் செய்யு ளுள்ளே**[18]

**மூக்கொலி மறைவு**

மூக்கொலியை இறுதியாகயுடைய சொற்களில் மூக்கொலி மருங்கொலியாயிற்று. மூன்றாம் வேற்றுமை உருபு,

ஆன் –ஆல் ஆயிற்று.

ஐந்தாம் வேற்றுமை உருபு

இன்-இல் ஆயிற்று

னகரம் ஞகரமாதல்

ன கரமானது ஞ கரமாகிறது.

அன்னை- அஞ்ஞை

முன்னை – முஞ்ஞை

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

ஆ காரம் ஒகாரம் ஆதல்

விதியியல் வரும் ஆ ஓ வாக மாகிறது.

சென்றார்- அசன்றோர்

வந்தார் – வந்தோர்

விகுதி முதல் அகரம் ஓகாரமாதல்

கிழவன்- கிழவோன்

இளையர் – இளையோர்

**யகர ஒலி மறைதல்**

ஆகாரத்திற்கு முன் வரும் யகர மெய் கெட்டுள்ளது ஓர் ஒலி மாற்றமாகும்.

**யாடு – ஆடு [19] நற் 266.5**

**யாமை – ஆம[20] புறம் 387.1**

**யார் – ஆர்[21] நற் 119.4**

**யாற்று – ஆற்று [22] பதிற் 43.15**

இம் மாற்றத்தை நேமிநாதம்

**யா முதற் பேர் ஆ முதலாகும்[23] 36**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

**உறழ்ச்சி**

பழந்தமிழில் உறழ்ச்சி சற்று மிகுதியாக உள்ளது.

**அகல்பு[24] - பதிற் 43**

**அகல்வு[25] - நற் 388**

**அசைபு[26] - அகம் 106**

**அசைவு[27] – அகம் 29**

**ஊணம்[28] – நற் 45**

**நிணம்[29] – அகம் 9**

தமிழ் மொழியில் காணப்படும் திணை பால் எண் இடம் ஆகியவற்றிற்கு அடிப்படையாக அமைவது பதிலிடு பெயர்களாகும்.இதனை தொல்காப்பியர்

**தன்மை முன்னிலை படர்க்கை யென்னும்**

**அம்மூ விடத்தும் உரிய என்ப[30] தொல் 511**

என்கிறார்.

சங்ககாலத் தமிழில் இறந்த காலம் இறப்பொல்லாக் காலம் என்ற வேறுபாடே காணப்படுகின்றன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

**இறந்தகாலம்**

த் – ந்த் – த்த் – ட் – ற் - க்

**செய்தனம்** [31] **குறு 340**

**செய்து** [32] **அகம் 32**

பிற்காலத்தில் த கரத்தை மட்டும் இறந்த கால விகுதியாக ஏற்கும் வினைகள் பழந்தமிழில் த கர விகுதியையும் இ கர விகுதியையும் பெற்றுள்ளன.

**இறப்பொல்லாக் காலம்**

வ்- ப் ம் – ந்

க்-த்-ட்-ற் போன்ற கால இடைநிலை தன்மையிலும் முன்னிலையிலும் வருகின்றன

**அறிகை** [33] **புறம் 186**

**உரைக்கோ**[34] **நற் 211**

**விடுதும்** [35] **புறம் 9**

இறப்பொல்லாகாலம் காட்ட உந், த், உம் க் ஆகிய பல விகுதி கள் உள்ளன.அறிநர் பொழுநர் அறிதி அறியும் அறிவாய் அறிகும் அறிகுவம் போன்ற பல சான்றுகள் உள்ளன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

**தன்மை ஒருமை**

பழந்தமிழில் தன்மை ஒருமை விகுதிகளாக ஏன்-என்-அன்-அல் காணப்படுகின்றன.

ஏன்

**வந்தேன்[36] பத்து 4.461**

**உரைப்பேன்[37] பதி 7.3**

**உணரேன்[38] அகம் 48.4**

**வாழலேன் [39] நற் 11.79**

**உடையேன் [40] குறு 230.4**

தன்மை ஒருமை விகுதிகளில் ஏன் விகுதி சங்க இலக்கியங்களில் மட்டும் வந்து சங்க மருவிய கால இலக்கியங்களில் முற்றிலும் மறைந்து விட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**தன்மை பன்மை**

தன்மைப் பன்மை விகுதிகளாக – ஏம் – எம்- கும்- இகும்-றும்- ஓம்- போன்றவை சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

-ஏம்

**விட்டேம் [41] நற்-15.10**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

**அல்கியேம்** [42] **-319.12**

**செல்வேம்** [43] **அகம் 319.15**

**பொருவேம்** [44] **பத்து 289**

**முன்னிலை ஒருமை**

ஐ ஆய் ஆகிய விகுதிகள் முன்னிலை ஒருமையைக் காட்டுவனவாகும்.ஐ விகுதி அதிகமாகவும் ஆய் விதி குறைவாகவும் சங்க இலக்கியங்களில் காணக்கடுகின்றன. இதற்கு மாறாக சங்க மருவிய கால இலக்கியங்களில் ஆய் விகுதி அதிகமாகவும் ஐ விகுதி குறைவாகவும் வருகின்றன.காலப்போக்கில் ஐ விகுதி வழக்கற்றுப் போவதையும் காண்கிறோம்.

**ஐ – இழைத்தனை**[45] **ஐங் 455.5**

**ஆய் – பிழைத்தாய்**[46] **புற 43.17**

**முன்னிலை பன்மை**

முன்னலை பன்மை விகுதியாக இர் – ஈர் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன.இர் விகுதி சங்க இலக்கியங்களில் அதிகம் பயின்று வர ஈர் விகுதி சங்க மருவிய கால இலக்கியங்களில் அதிகம் பயின்று வருகின்றன.

**இர் என்றனிர்** [47] **பதி 77.2**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

**ஈர் காணீர் [48] அகம் 130.1**

**படர்க்கை**

ஆண்பால் . சங்க இலக்கியங்களையும், சங்க மருவிய கால இலக்கியங்களையும் ஆராய்ந்து நோக்கும் போது அன் ஆன், ஒன் ஆகிய விகுதிகளில் சங்க இலக்கியங்களில் அன் விகுதியும் சங்க மருவிய கால இலக்கியங்களில் ஆன் விகுதியும் அ௱திகம் பயின்று வருகின்றன.ஆன் விகுதி சங்க காலத் தமிழில் எதிர்மறையில் வர, சங்க மருவிய காலத் தமிழில் கால இடைநிலைக்குப் பின்னர் வருகின்றன [49]

**அன் – என்றனன் [50] நற் 50.7**

**ஆன் – மலைந்தான்[51] ஐங் 201.2**

**ஒன் - ஈத்தோன்[52] புறம் 386.16**

பெண்பால். சங்க இலக்கியங்களில் அள்- ஆள்- ஒள்- இ விகுதிகள் பெண்பாலைக் காட்டுவனவாகும். அள்- ஆள் – இ- வினை முற்றுக்களிலும் வினையாலணையும் பெயர்களிலும் வர , இ விகுதிகளிலும் மட்டுமே வருகின்றன.

**அள் – வந்தனள்[53] நற் 352.12**

**ஆள் – செல்வாள்[54] நற் 20.9**

**ஒள் – கிடந்தோள்[55] நற் 370.4**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

**இ – உறுவி [56] குறு 192.2**

சங்க கால மொழியைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள, திராவிட ஒப்பிலக்கணத்தோடும் இடைக்காலத் தமிழ்ழோடும் ஒப்பிட்டு காண முடிகிறது[57]

சங்க காலத் தமிழில் மிக நீண்ட கலப்பு வாக்கியங்களையே காண்கிறோம்.எளிமையான வாக்கியங்கள் மிக அருகியே காணப்படுகின்றன. இருபதுக்கும் அதிகமாக துணைவாக்கியங்களை இணைத்து உருவான கலப்பு வாக்கியங்களைப் பதிற்றுப்பத்திலும் அகநானூற்றிலும் காண்கிறோம்.

பொருளின் அடிப்படையில் வாக்கியங்களை,

1. செய்தி வாக்கியங்கள்
2. வினாவாக்கியங்கள்
3. வியங்கோள் வாக்கியங்கள்
4. ஏவல் வாக்கியங்கள்
5. உணர்வு வாக்கியங்கள்
6. கூட்டு வாக்கியங்கள் எனப் பிரிக்கலாம். இவற்றில் இருந்து பல விளக்கங்களை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

## முடிவுரை

சங்ககாலத் தமிழ் தொல்காப்பியத் தமிழைப் பெருபான்மை ஒத்தும் சிறுபான்மை வேறுபட்டு இருப்பதை காண முடிகிறது. வேறுபடுதல் என்பது மொழி வளர்ச்சயைக் காட்டுவதாகும்.தமிழக வரலாற்றில் சங் காலத்தில் நிறைய இலக்கியங்கள் தோன்றியுள்ளன.இவிவலக்கியங்களின் அடிப்படையில் சங்ககாலத் தமழ் இங்கு ஒரு சிறு பகுதி மட்டுமே ஆராயப்பட்டுள்ளன.

## அடிக்குறிப்புகள்

1. நற்றிணை பா - 212
2. மேலது பா - 5
3. அகநானூறு - பா 34
4. மேலது பா - 36
5. பொருநராற்றுப்படை பா - 172
6. அகநானூறு பா - 24
7. மதுரைக்காஞ்சி பா - 356
8. பதிற்றுப்பத்து பா - 30
9. புறநானூறு பா - 93
10. அகநானூறு பா - 149
11. பதிற்றுப்பத்து பா - 67
12. மீனாட்சிசுந்தரம் தெ.பொ.மி. தமிழ்மொழி வரலாறு பக் – 108
13. தொல்காப்பியம் நூ – 51

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

14. நற்றிணை பா - 381

15. புறநானூறு பா - 150

16. மேலது பா - 152

17. நற்றிணை பா – 68

18. நன்னூல் நூ – 120

19. நற்றிணை பா – 266.5

20. புறநானூறு பா – 387.1

21. நற்றிணை பா – 119.4

22. குறுந் – 24.3

23. நேமிநாதம் நூ – 36

24. பதிற்றுப்பத்து பா – 43

25. நற்றிணை பா – 388

26. அகநானூறு பா – 106

27. மேலது பா – 29

28. நற்றிணை பா – 45

29. அகநானூறு பா – 9

30. தொல்காப்பியம் நூ – 511

31. குறுந்தொகை பா – 304

32. அகநானூறு பா – 32

33. புறநானூறு பா – 186

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

34. நற்றிணை பா – 211
35. புறநானூறு பா – 9
36. பதிற்றுப்பத்து பா- 4.461
37. மேலது பா – 73.17
38. அகநானூறு பா – 48.4
39. நற்றிணை பா – 11.79
40. குறுந்தொகை பா – 230.4
41. நற்றிணை பா – 15.10
42. அகநானூறு பா – 319.12
43. மேலது பா – 319.15
44. மேலது பா – 9.289
45. ஐங்குறுநூறு பா – 445.5
46. புறநானூறு பா – 43.17
47. பதிற்றுப்பத்து பா – 77.2
48. அகநானூறு பா – 236.16
49. அகத்தியலிங்கம் ச. சங்கத்தமிழ் பக் – 2275
50. நற்றிணை பா – 50.7
51. ஐங்குறுநூறு பா – 20.1
52. புறநானூறு பா – 386.16
53. நற்றிணை பா – 352.12

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

54. மேலது பா – 20.9
55. மேலது பா – 370.4
56. புறநானூறு பா – 161.6
57. சண்முகம் செ.வை சங்க இலக்கிய மொழியமைப்பு பக் – 326-334.

**துணைநூற்பட்டியல்**

1. அகத்தியலிங்கம் ச. சங்கத்தமிழ் – 3 அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம் அண்ணாமலை நகர்.
2. அகத்தியலிங்கம் ச சொல்லியல் 1.பெயரியல் அண்ணாமலை நகர்.
3. அகத்தியலிங்கம் .ச. முன் பழந்தமிழும் பின் பழந்தமிழும் மொழியியல் அண்ணாமலை நகர்.
4. இளம்பூரணனார், தொல்காப்பியம் சாரதா பதிப்பகம், சென்னை
5. .இராசா (முனைவர்.கி) தமிழ் இலக்கிய வரலாறு,அன்னை நிலையம், திருச்சிராப்பள்ளி, முதல்பதிப்பு 2001
6. சண்முகம் செ.வை சங்க இலக்கிய மொழியமைப்பு ஆராய்ச்சி சென்னை.
7. சுபாஷ் சந்திரபோஸ் நன்னூல் இயல் பதிப்பகம் தஞ்சாவூர்.
8. மீனாட்சிசுந்தரம் தெ.பொ. தமிழ்மொழி வரலாறு சர்வோதய இலக்கியப் பண்ணை மதுரை.
9. மோகன் (முனைவர் இரா) பத்துப்பாட்டு,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,